**பலாங்கொட நகர சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பலாங்கொட நகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பலாங்கொட நகர சபையின் மழைநீர் வழிந்தோடும் வடிகால் முறைமையைப் பழுதுபார்ப்பதற்காக உள்நாட்டுக் கடன் நிதியத்திலிருந்தும் அபிவிருத்தி நிதியத்திலிருந்தும் 2004 திசெம்பர் 31 இல் பெறப்பட்ட ரூபா 8,815,586 தொகையான கடன் நிதியும் அக் கடன் நிதியத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,228,781 தொகையான வட்டியும் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி கையில் உள்ள இருப்பு மீதியின் பெறுமதி ரூபா 1,771,399 தொகையான போதிலும் இறுதிக் கணக்கு அறிக்கையின் படி ரூபா 611,727 தொகையானமையால் இருப்பு பெறுமதி ரூபா 1,159,672 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடு நிலவியது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 1,206,874 செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறவேண்டிய இயந்திர வாடகையான ரூபா 93,133 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 வங்கிக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 05 வங்கிக் கணக்குகளுக்குரித்தாகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் தொடர்ந்தும் தீர்க்கப்பட்டிராத ரூபா 3,923,114 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அறிக்கையின் படி வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட ரூபா 846,494 பெறுமதியான 20 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 189 ஆம் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அறிக்கையின் படி குறித்த காசோலைகள் விநியோகிக்கப்பட்ட நாள் முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்து ரூபா 1,193,433 கூட்டுத்தொகையான பெறுமதியான 32 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 922,750 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் 2014 ஆம் ஆண்டின் போது அன்பளிப்பாக் கிடைக்கப்பெற்ற ரூபா 54,125 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்கள் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,159,897 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,207,355 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 47,458 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வீதவரியும் வரியும் ரூபா 771,390 தொகையாலும் வருமான மானியம் ரூபா 7,931,089 தொகையாலும், ஏனைய வருமானம் ரூபா 2,966,800 தொகையாலும் ஆணைச்சீட்டுக் கட்டணம் தண்டப்பணம் மற்றும் தண்டனைகள் ரூபா 168,244 தொகையாலும் அதிகரித்தமையும் பயணச் செலவினம், போக்குவரத்துத் தொடர்பாடல்கள், தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும்

வட்டிக் கொடுப்பனவுகள் பங்கிலாபம் மற்றும் ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவுகள் ரூபா 1,722,535 தொகையால் குறைவடைந்தமையும் மேற்குறித்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகியிருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| வருமான உட்பாய்ச்சல் | மதிப்பிடப்பட்ட வருமானம் | 2014 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான உள்ளபடியான பெறுவனவுகள் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 6,800 | 7,225 | 860 |
| வாடகை | 8,201 | 7,537 | 1,316 |
| **ஏனைய வருமானம்** | | | |
| வாடகை – சபையிடம் உள்ள ஆதனங்கள் (3.0.324) | 64 | 51 | 64 |
| மதுபான விற்பனை நிலையக் கட்டணம் | 16,000 | 15,433 | 566 |
| திறந்த விற்பனை நிலைய கடை வாடகை (3.0.322.1) | 1,398 | 1,438 | 140 |
| நடை பாதை கடைகள் | 4,165 | 4,278 | 127 |

## 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

---

(அ) 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் கணிப்பிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திடம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2014 யூலை 30 ஆம் திகதி வரை பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 647,244 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திடம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஏற்பாட்டுப் பயன்பாடு